# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.187/2017 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா-03 (PW-03 ) |
| பெயர் | :- | அமுதா(சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்) |
| தேதி | :- | 26-06-2025 |

**சான்றாளர் மீண்டும் அழைக்கப்பட்டார். சான்றாளருக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :-**

நான் தற்போது சேலம் அழகாபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். அந்த காவல் நிலைய குற்ற எண்.302/2014 சம்மந்தமாக தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்யுமாறு காவல் நிலைய பொறுப்பு அலுவலருக்கு இந்த வழக்கிலிருந்து அழைப்பாணை வந்தது. அதனால் பொறுப்பு அலுவலர் அந்த நகலை என்னிடம் கொடுத்து இந்த வழக்கில் தாக்கல் செய்ய சொன்னார். நான் அதை கொண்டு வந்துள்ளேன். அந்த இறுதி அறிக்கையின் சான்றிட்ட நகல் சாட்சி தரப்பு 8 ஆம் சான்றாவணமாக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

எனக்கு மேற்சொன்ன நடவடிக்கை குறித்து நேரடியாக தெரியாது. இந்த அறிக்கை அதிகாரவரம்புள்ள நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து RCS கொடுக்கப்பட்டு சுழிக்கப்படவில்லை என்றால்

கொடுக்கப்பட்டுவிட்டது. சுழிக்கப்படவில்லை. இந்த நடவடிக்கைக்கான முதல் தகவல் அறிக்கை நீதித்துறை குற்றவியல் நடுவரின் ஆணைக்கு பிறகே பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இறுதி அறிக்கை தாக்கல் செய்வது குறித்து நிகழ்நிலை புகார்தாரருக்கு காவல் நிலையத்திலிருந்து அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். புலனாய்வு சரியாக செய்யாமல் வேண்டுமென்றே எதிரிக்கு உதவி செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் தயாரிக்கப்பட்ட இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இறுதி அறிக்கையில் ஆவண இணைப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான்.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.